# BETHANY'S
*Magazine*

ISSUE 17

MAR - APR 2023



And God placed all things under his feet and appointed him to be head over everything for the church, which is his body, the fullness of him who fills everything in every way.

Ephesians 1: 22-23

எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.

எபேசியர் 1:22-23

# How to be a Committed member of the Church?



## From Pastor's Desk

### Dear Brothers & Sisters in Jesus Christ!
### Good tidings to you all!

**I felt there is a strong urge from God to exhort you all with this message "How to be a Committed member of the Church"?**

Inorder to be a Committed member of the Church or to be a servant of God it is not easy and the first question arises whether to please God or man. But **I have made the decision to please only God and obey him alone.** With this personalized note I want to begin this message which God wants to share with you.

We need to understand; without committing to the Lord, we cannot commit ourselves to the church. Some will be feeling zealous for the church, they expect everything to be orderly and perfect in the church even for simple arrangement of chairs or for any petty things. Being zealous for the church without committing to the Lord will not help in the long run, it will just end up; unable to please man at all times and lead to division. *This man of God Joel Osteen said "You can be committed to church but not committed to christ. But you cannot be committed to Christ and not committed to the Church".*

**Let me share a few points which are mandated to become a Committed member of the Church.**

**1) First and foremost thing is to attend Church regularly.** We read this in **(Hebrews 10: 25)** We need to be physically present in the Church service. Today's trend is that people follow online service but that is not what is expected of us. The Bible teaches us that we need to be gathered in one place with one accord. So if we are Committed member of the church we will never miss to attend the Church Service.

Next important aspect is don't be idle. We need to make sure we set a lively example for whoever comes in contact with us in Church. This should visibly impact changes within our personal life and also people who are surrounded by us.

**2) Be involved in the Church and be part and supportive for the vision and mission of the Church.** Church is a place which functions with multiple teams who coordinate for various ministry accomplishments. Yes, definitely many work for God's ministry. Some of us take part only when we have time and simply give a reason that there are people who are paid for the job and that person must do the job. Some would like to attend the Sunday service on time, listen to the sermon and go back home as soon as possible. This is like someone going to a restaurant; having food and washing hands and leaving - because they don't have to cook, clean or do any work as there are people assigned for it. But we need to move away from this kind of consumer concept. If we need to be a Committed member of the Church; we need to take ownership of the vision and mission of the Church and do as much as possible to build the Kingdom of God.

**3) Be a good Ambassador of the Church.** We need to spread the gospel wherever we go and represent our Church, introduce Jesus and explain to them how they can participate in the Church services and set a goal to bring at least one new soul every week. If we are leading someone from another town then we need to discuss with the pastor and identify where to send them to a local Church. We need to focus on people who are located around 1 mile of distance so that transport is not required so they can walk and come to Church. We need to build our local Church. People need to see that we are committed to Church.

**4) Prayer of goodness even for people who hate us.** Satan will always try to distract us from being Committed member of the Church, that's why we need to be careful even in how we pray. There might be scenarios people might have hurt, spoke ill words but a person who is not spiritually grown still with child-like character. Will pray saying; put that person down, let the person dare not rise up against me, bring shame, let them not prosper etc. But if a person is spiritually matured; their prayer will be Lord please forgive them, heal them, wipe away their tears and give good life. Even our prayers will symbolize whether we are Committed member of the Church.

**5) Being Martyrs for Jesus.** We need to understand how the Church is built, Jesus himself died on the Cross and shed his Blood for us. If Jesus didn't die then there is no Church today. Likewise Martyrs are the seeds of the Church. Even today across the world so many people are dying as martyrs for Jesus. Just to mention one of it, we all know; in North India Graham Staines - Missionary who was burnt alive with his 2 children in a jeep. Every day Satan is working against the Church and ministry, if we are a Committed member of the Church we will be vigilant and even be ready as Martyr for Christ sake.

**6) If we are a Committed member of the Church;** we need to consider others and care for each other, look around to do good deeds. **(Heb 10: 24, 25)** If a person has fallen down, we need to be caring and ask the person if they need help. But if it is within our house we need to help without any question. We as one family in Church need to check for our family members if they are misguided or personally affected. Some may smile but they might be having so many needs, grieves, sorrows or going through tough times and if we are a child of God when we see the smile we need to identify it and need to pray for the person and help them. We need to be one spiritual family and let's not be a person to let them leave or move out of church for silly things.

In **(Ephesians 1: 22 & 23)** we read **Jesus is the Head of the Church and He is our Chief Shepherd and God has appointed earthly Shepherds in different places of the world to protect His flock**. God could have left the flocks alone but he has appointed leaders or shepherds because wolves come and take the sheep. Wolves will come in disguise as sheep but Shepherds take heed and watch over and protect. **If we are a Committed member of the Church, we will just obey as it is written in (Hebrews 13: 7)** Remember your leaders, who spoke the word of God to you. Consider the outcome of their way of life and imitate their faith.**(Hebrews 13:17)** Have confidence in your leaders and submit to their authority, because they keep watch over you as those who must give an account. Do this so that their work will be a joy, not a burden, for that would be of no benefit to you.


Let us surrender again to Jesus Christ and then re-dedicate to be a Committed member of the Church.

**May God help us all.**

*In His Royal Service*

- *Pastor*. Thangiah Sathiyaraj





# எகோவா சிட்கீனு

யாக்கோபையும் தேவன் பொருளாதார ரீதியிலே ஆசீர்வதித்தார் என்று பார்க்கிறோம். யாக்கோபு தன்னுடைய மாமன் லாபானிடத்தில் சிக்கித் தவித்து, எல்லாற்றைம் இழக்கக் கூடிய நிலையிலிருந்த போது, தேவன் அவன் பக்கம் இருந்து அவனுக்கு காரியங்களை வாய்க்கப்பண்ணினபடியால் அவன் மிகவும் விருத்தியடைந்து திரளான ஆடுகளும், வேலைக்காரிகளும், வேலைக்காரரும், ஒட்டகங்களும், கழுதைகளும் உடையவனாய் (ஆதியாகமம் 30:43) ஆனான். பொருளாதார ரீதியிலே தேவன் அவனுக்கு அற்புதங்களை செய்து அவனை ஆசீர்வதித்தார் என்று பார்க்கிறோம். அவனும் தேவன் தன்னை ஆசீர்வதிப்பார், தன்னுடைய தேவைகளையெல்லாம் சந்தித்துக் காப்பார் என்றுவிசுவாசித்து எதிர்பார்த்தான் (ஆதியாகமம் 28:20&22).

வாழ்க்கை எப்படியிருந்தால் என்ன என்று அவன் இருந்திருப்பானல் அவனுக்கு விரோதமாக அவன் மாமனார் செய்த யாவற்றையும்கண்டு, அதைரியங்கொண்டு, மனம் வெறுத்துப்போய், வெறுங்கையனாய் திரும்பியிருப்பான். ஆனால் தன்னுடைய பொருளாதார நிலையைக் குறித்து தேவன் கரிசனை உள்ளவராய் இருக்கிறார் என்றும், அவனுக்கு தேவன் அந்த காரியத்திலே உதவி, அற்புதத்தைக் கூட செய்வார் என்றும் எதிர்பார்த்தபடியினால் அவன் தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்று அனுபவித்தான். பணம்முக்கியமல்ல என்று இவனும் எண்ணவில்லை, தேவனும் எண்ணவில்லை. தேவன் தன்னுடைய முற்பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும் வாக்குப்பண்ணினவைகளை இவன் அறிந்திருந்தபடியினால் பொருளாதார ஆசீர்வாதம் தன்னுடைய பிறப்புரிமை என்று நம்பினான். நம்பினபடியினால்தான் இக்கட்டான சூழ்நிலைகள்களின் மத்தியிலும் தேவனை விசுவாசித்து பொருளாதார ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொண்டான்.

ஆனால் அநேக கிறிஸ்தவர்கள் இன்றைக்கு அப்படி இருப்பதில்லை. பணம் முக்கியமல்ல என்று அவர்களுக்கு போதிக்கப்பட்டிருப்பதால் அதை அப்படியேநம்புகிறார்கள். வாழ்க்கையிலும், வேலையிலும், வியாபாரத்திலும் ஏற்படும் பிரச்சனைகளைக் கண்டு “உண்மையான விசுவாசியாய் இருந்தால் வேலையிலும், தொழிலிலும், வியாபாரத்திலும் வெற்றி பெறுவது கடினம்” என்று கூறிக்கொண்டு, தங்களுடைய தோல்வியை நியாயப்படுத்துகிறார்கள். இவைகளிலே வெற்றிப் பெறவேண்டும் என்று அவர்கள் தேவனை விசுவாசிப்பதில்லை. வெற்றிக்காக முயற்சி செய்வதோ விசுவாசிப்பதோ கிடையாது. வாழ்க்கையின் பிரச்சனைகளை தேவனுடைய ஒத்தாசையுடன் எதிர் நின்று வெல்ல முடியும் என்று நம்புவது கிடையாது. இதற்கெல்லாம் காரணம், பணம் முக்கியமற்றது என்கிற தவறானகொள்கை!

> நம்முடைய தியாகத்தை மேன்மைப் பாராட்டிக்கொண்டு, பணம்முக்கியமல்ல என்று சொல்லிக் கொண்டிருப்பதைக் காட்டிலும், இயேசுவினுடைய கல்வாரி தியாகத்தை எண்ணிப்பார்த்து, அதைமேன்மைப் பாராட்டி, அவர் சம்பாதித்துக் கொடுத்த ஐசுவரியத்தை பெற்றுக்கொள்வது நல்லது. உங்கள் பஞ்சத்தை மேன்மைப்பாராட்டாதீர்கள். கர்த்தராகிய இயேசுவின் மூலம் உண்டாயிருக்கும் ஆசீர்வாதத்தை மேன்மைப்பாராட்டுங்கள்!

அநேக கிறிஸ்தவர்கள், உலகத்தில் பாடுகள் உண்டு என்பதை பெரிதுப்படுத்துகிறார்களே தவிர, நமக்குள் இருக்கும் கிறிஸ்து இந்த பாடுகளை உண்டுபண்ணுகிற பிசாசைக் காட்டிலும், அவனுடைய சார்பில் பொல்லாத கிரியைகளை நடப்பிக்கும் மனிதர்களைக் காட்டிலும் பெரியவர் என்பதை பெரிதாக எண்ணுவதோ பேசுவதோ கிடையாது.

உங்களுக்கு விரோதமாக எழும்பும் ஆயுதங்கள் ஒன்றும் வாய்க்காமற்போகும் (ஏசாயா 54 :14) என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறதே. உங்களுக்கு விரோதமாய் வருகிறவர்கள் ஒரு வழியாய் வந்து ஏழுவழியாய் ஓடுவார்கள் (உபாகமம் 28:7) என்று வேதம் கூறவில்லையா? இது நீங்கள் செய்யும் வேலை, தொழில் போன்றவைகளுக்கு பொருந்தாதா? நீங்கள் கையிட்டு செய்கிற எல்லாவற்றிலும் கர்த்தர்தாமே ஆசீர்வாதத்தைக் கட்டளையிடும்போது... (உபாகமம் 28:8,12),அந்த ஆசீர்வாதத்தை தடைசெய்ய எந்த மனுஷனால் கூடும்? ஆயிரம் லாபான்கள் உங்கள் வாழ்க்கையில் எழும்பினாலும் அது கூடாது! இன்றைக்கு அநேக விசுவாசிகள் இவற்றை, விசுவாசியாததற்கு காரணம் பணம் முக்கியமற்றது என்கிற அவர்களுடைய தவறான கொள்கை!

யோசேப்பின் வாழ்க்கையும், பொருளாதாரம் முக்கியமானது என்று தேவன் எண்ணுகிறார் என்பதை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. உண்மையான விசுவாசிகள் இந்த உலகத்தில் முன்னேற முடியாது என்பவர்கள் யோசேப்பின் வாழக்கையை கவனிப்பது அவசியம். எத்தனை பேர் அவன் மீது பொறாமைக் கொண்டும், பொய் குற்றஞ்சாட்டியும் அவனை அழிக்க நினைத்தப் போதும், தேவன் அவனுக்கு ஒத்தாசையாய் இருந்து அவனை உயர்த்தி ஆசீர்வதிக்கிறார். தேவனுடைய தயவும் ஆசீர்வாதமும் ஒரு மனுஷனுக்கு உண்டாயிருக்கும் போது அவன் உயர்த்தப்படுகிறான் என்பது தான் உண்மை. அந்த ஆசீர்வாதத்திலே பொருளாதார செழிப்பும் அடங்கியிருக்கிறது.

தொடரும்...

**Rev. J. ஹாரிஸ்**
ஜீவ வார்த்தை ஆலயம், மாடக்குளம் ரோடு, மதுரை.

# மணவாளன் இயேசுவை நெருங்குவதற்காக பாரினில் வாழ வேண்டிய வாழ்க்கை

## மத்தேயு 25ம் அதிகாரத்திலிருந்து...



மத்தேயு 25 : 1 - 13 பரலோகத்தில் ஒருநாள் நடைபெறப் போகும் திருமணம் குறித்து இவ்வசனம் பேசுகின்றது. மணவாளன் இயேசுவுக்காக பிதாவாகிய தேவனுக்கு முன்பாக முழுத் திருச்சபையும் இணையும் நேரம். மணவாளன் வருகின்றார் என்ற சத்தம் கேட்டும் அனேகசபைகள் தங்கள் சொந்த அலுவல்களில் இருக்கின்றார்கள். சில வேளைகளில் களைப்பு வருகின்றது. அதனால் நமக்கு ஓய்வு தேவை, களைப்படைந்தபடியால் கொஞ்சம் ஓய்வெடுக்க நினைத்தார்கள். இங்கே ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். சரீரம் ஓய்வெடுக்கலாம் ஆனால் ஆத்துமா ஓய்வெடுக்கக் கூடாது. ஏனென்றால் வேதம் சொல்லுகின்றது நீங்கள் நினையாத நாளிகையிலே மனுஷ குமாரன் வருவார்.

கிறிஸ்து எப்பொழுது வருவார் என்பது அனேகருடைய கேள்வி ஆனால் நீங்கள் இப்பொழுதே ஆயத்தமாக இருக்க வேண்டும். தனிப்பட நாம் ஒவ்வொருவரும் ஆயத்தமாக இருப்பதைத் தவிர எங்களை ஆயத்தப்படுத்துவதற்கு நாம் மற்றவர்களை நம்ப முடியாது. மத்தேயு 25 : 9 புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தமாக, அப்படியல்ல எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி நீங்கள் விற்கிறவர்களிடத்தில் போய் உங்களுக்காக வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள். அந்த நேரத்தில் வேறு எதுவும் செய்ய முடியாது மணவாளனோடு செல்வதற்குரிய நேரம் மாத்திரமே இருக்கும்.

நாம் கிறிஸ்துவை தனிப்பட்ட ரீதியில் அனுபவிக்க வேண்டும். இந்த தனிப்பட்ட உறவு என்பது நாம் எப்பொழுதும் தேவனுக்குரியதைச் செய்துகொண்டிருப்பதைக் குறிக்கின்றது. எமது வாழ்வில் அல்லது மணவாட்டியில் காணப்படுகின்ற ஓர் குறைவு முழுப்பிரச்சினைக்கும் காரணமாகிவிடும் எனவே எண்ணெய் குறைவு என்பது பிரதியீடு செய்யமுடியாத ஒன்றாகும். இதனால் வருகின்ற இழப்புக்கள் என்பது நிச்சயமாக மணவாளனைப் பிரிதலாகும். யாக்கோபு 2: 10 எப்படியெனில் ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக் கொண்டிருந்தும் ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். தேவனுடைய வார்த்தை எமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற மிகவும் பிரகாசமான, பலமான வெளிச்சமாக இருக்கின்றது வார்த்தையை நிறைவேற்றுவது அல்லது கடைப்பிடிப்பது முதன்மையான நோக்கமாக எமக்கு இருக்க வேண்டும்.

சங்கீதம் 119 : 105 உம்மமுடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. தேவன் தன்னுடைய வார்த்தையை இலவசமாக தந்திருக்கின்றார், பூமியில் நாங்கள் வாழ வேண்டிய வாழ்க்கை முறையை விளக்கியிருக்கின்றார், எங்கள் தனிப்பட்ட ஆத்துமாவுக்கு நாம் ஒவ்வொருவரும் தனிப்பட பொறுப்பு. அதுமட்டுமல்ல இன்று நாம் உலகத்தில் நடைபெறுகின்ற இயற்கை அனர்த்தங்களை கண்களூடாக காணக்கூடியதாக இருக்கின்றது இந்த இயற்கை அழிவுகளைக் குறித்து மத்தேயு 24ம் அதிகாரத்தில் இயேசு கூறிய வார்த்தைகள் நிறைவேறிக் கொண்டிருக்கிற காலங்களாக இருக்கின்றது. இது எமக்கு எச்சரிக்கையாக காணப்படுகிறது, நாமும் விழித்திருப்போம் மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோம். இயேசு கிறிஸ்து போதித்த உவமைகளை படிப்பதற்காக மட்டுமல்ல எமது வாழ்க்கைக்கு தேவையான பாடமாக மாற்றுவோம். பரலோகம் செல்ல ஒரு பரிசுத்த கூட்டத்தை ஆயத்தப்படுத்துவோம் ஏனென்றால் தேவனுடைய செய்கைகளை நாம் அறிவோம்.

**சிந்தனைக்கு!**

"பரிசுத்தமாக வாழ வேண்டுமென்ற தீர்மானம், ஒரு போதும் எம்மை வெட்கப்படுத்தாது."

தொடரும்...

**சகோ: வேதநாயகம் ஜெறோம்**
பெத்தானியா தேவாலயம், கென்டன்.







## இஸ்ரவேலை அரசாண்ட

# ராஜாக்களின் சரித்திரம் ...

எரிகோவை சுற்றிவர இஸ்ரவேலர் போகும்பொழுது, உடன்படிக்கைப் பெட்டியை சுமந்து சென்றார்கள் (யோசுவா 6:4-12). பெலிஸ்தியர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாக வந்தபோது ஜனங்கள் சீலோவாவிலே இருக்கிற கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டு வருவோம்; அது நம்மை நம்முடைய பகைஞரின் கைக்கு விலக்கி இரட்சிக்கும்படி வரவேண்டியது என்றார்கள். கர்த்தருடைய பெட்டி பாளையத்தில் வந்தபோது ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள். பெலிஸ்தியர் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி பாளையத்திற்கு வந்ததை அறிந்து கொண்டார்கள். யுத்தம் நடந்தது. தேவனுடைய பெட்டி பெலிஸ்தியரிடம் பிடிபட்டது. இஸ்ரவேலர் தோற்றுப்போயினர். தேவனுடைய பெட்டி பிடிபட்டதினால் ஏலியின் மருமகள் பினெகாசின் மனைவி தேவனுடைய பெட்டி பிடிபட்டுப் போனபடியினால், மகிமை இஸ்ரவேலை விட்டுப் போயிற்று என்று தான் மரிக்கும்பொழுது கூறினாள். (நியா, 4)

பெலிஸ்தியர் தேவனுடைய பெட்டியை அஸ்தோத்திற்கு கொண்டு சென்றார்கள். தாகோனின் கோவிலில் வைத்தார்கள், மறுநாள் பார்த்தபோது தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன் விழுந்து கிடந்தது ; அவர்களுக்கு கர்த்தருடைய கை பாரமாயிருந்தது. மூல வியாதி அவர்களுக்கு உண்டானது. கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியை அனுப்பினார்கள். பெத்ஷிமேசின் மனுஷர் கர்த்தருடைய பலி செலுத்தினார்கள். பெத்சிமேசின் மனுஷர் கர்த்தருடைய பெட்டிக்குள் பார்த்தபடியினால் ஜனங்களில் ஐம்பதினாயிரத்து எழுபது பேரை கர்த்தர் அடித்ததால் அவர்கள் மரித்தார்கள். இந்தப் பரிசுத்தமான தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கத்தக்கவன் யார்? என்று கூறினார்கள். பெட்டி கீரியாத்யாரீமின் மனுஷரிடம் வந்தது. கர்த்தருடைய பெட்டியைக் காக்கும் படிக்கு எலெயாசாரைப் பரிசுத்தப்படுத்தினார்கள். பின்னர் பெலிஸ்தியருடன் போரிட்டு அவர்கள் மேற்கொண்டார்கள்.(1 சாமு, அதி. 6,7)

தேவனுடைய பெட்டி கிபியாவிலிருக்கிற அபினதாபின் வீட்டில் இருந்தது. தாவீது முப்பதினாயிரம் பேரைக் கூட்டி, கர்த்தருடைய நாமம் தொழுது கொள்ளப்படுகிற தேவனுடைய பெட்டியை புது இரதத்தின்மேல் ஏற்றி கொண்டுவந்தார்கள். அபினதாபின் குமாரராகிய ஊசாவும் அகியாவும் அந்தப் புது இரதத்தை நடத்தினார்கள். அகியா பெட்டிக்கு முன்னாலே நடத்தான், தாவீதும் இஸ்ரவேல் சந்ததியாரும், சகல கீத வாத்தியங்களோடு கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக் கொண்டு போனார்கள். அவர்கள் தாகோனின் களம் இருக்கும் இடத்திற்கு வந்தபோது, மாடுகள் மிரண்டு பெட்டியை அசைத்தபடியினால் ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய்த் தன் கையை நீட்டி அதைப்பிடித்தான்.

அப்பொழுது கர்த்தருக்கு ஊசாவின் மேல் கோபமூண்டது. அவனுடைய துணிவினிமித்தம் தேவன் அங்கே அவனை அடித்தார், அவன் அங்கே தேவனுடைய பெட்டியண்டையில் செத்தான். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பிரமாணங்களை நியமித்து. அதின்படியே வாழச் சொல்லியிருந்தார். ஒவ்வோரு காரியத்திற்கும் கட்டளைகளையும் வழிமுறைகளையும் சொல்லி இருந்தார் உடன்படிக்கைப் பெட்டியை ஆசாரியர்கள்தான் தொட வேண்டும். அதற்கும் அவர்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்தியிருக்க வேண்டும். அது தேவகட்டளை, மற்ற யாரும் தொடக்கூடாது. ஊசாயின் தகப்பன் அம்மினதாபின் வீட்டில் தான் தேவனுடைய பெட்டி இருந்தது. யாரும் தொடவில்லை. அவர்களுக்குத் தொடக்கூடாது என்று தெரியும். தெரிந்தும் ஊசா தொட்டதினிமித்தம் தேவன் அடித்தார். அவ்வளவு பயங்கரமும். பரிசுத்தமுமுள்ள தேவன் தான், நம்முடைய தேவன். அப்படிப்பட்ட வல்லமையுள்ள, தேவன்தான் நமக்காக மரித்து நம் பாவங்களை நீக்கி நம்மை மீட்க பூமியில் அவதரித்தார். அவருடைய பெற்றோர் சீஷர்கள், ஜனங்கள் பலரும் அவரைத் தொட்டார்கள், இப்போழுதோ அவரைத் தொட்ட எவரும் சாகவில்லை. தொட்டவர்கள் சுகம் பெற்றனர், 12 வருட பெரும்பாடுள்ள ஸ்திரீ அவரின் வஸ்திரத்தை தொட்டதினால் சுகம் பெற்றாள்.

அந்த தேவாதி தேவன் தான் இயேசு. அவர் நமக்குள் இருக்கிறார். அவர் பரிசுத்த தேவன் அன்பின் தேவன், ஆண்டவர் இயேசு திரும்பவரும் பொழுதோ தமது பரிசுத்தவான்களைக் கூட்டிச் சேர்க்கத்தான் வருகிறார். அவர் அப்பொழுது அன்புள்ளவராக அல்ல பட்சிக்கிற அக்கினியாக வருவார், அவர் சொல்லிய வார்த்தையின்படியே நியாயந்தீர்ப்பார், தேவன் அன்புள்ளவர்தானே, தண்டிக்கமாட்டார் என்றோ, எப்படி வாழ்ந்தாலும் பரலோகத்துக்கு கொண்டுபோய் விடுவார் என்ற நினைவு இருக்குமாயின் அந்த நினைவு அப்படிப்பட்டவர்களை மோசம் போக்கிவிடும். பயத்துடனே கர்த்தரை சேவியுங்கள் என்று சங்கீதக்காரர் கூறுகிறார்.

அவருக்குப் பயப்படும் பயம் ஒவ்வொருவருக்கும் வேண்டும். தீமையை விட்டு விலகுவதே கர்த்தருக்குப் பயப்படும் பயம். எச்சரிக்கையாயிருங்கள், தேவன் யார் என்பதை அறிந்து அவருக்குப் பயந்து வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

**இப்படிக்கு கிறிஸ்துவின் பணியில்**

**பாஸ்டர். S.J. தினகரன்**

# விடையை கண்டுபிடிப்போம்



## 2 இராஜாக்கள் 1–4

1. தன் வியாதியிலும் இஸ்ரவேலின் தேவனை தேடாமல் எக்ரோனின் தேவனிடத்தில் விசாரித்த இராஜா யார் ?

2. எலியா எத்தகைய உடையை அணிந்திருந்தான் ?

3. கர்த்தர் எலியாவை பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்போகிற போது எலியாவும், எலிசாவும் எந்த இடத்திலிருந்து புறப்பட்டார்கள் ?

4. எலியாவிடம் எலிசா கேட்டது என்ன ?

5. எலியா பரலோகிற்கு எதில் ஏறிச்சென்றார் ?

6. எலிசாவின் முதல் அற்புதம் என்ன ?

7. யூதாவின் இராஜாவாக யோசபாத் இருந்த போது மோவாபிய இராஜா யார் ?

8. கர்த்தரின் வார்த்தையை கேட்கும்படி எலிசாவிடம் சென்ற இராஜாக்கள் யாவர் ?

9. எலிசாவின் வார்த்தையின்படி விதவையின் கடனைத்தீர்க்க அவளுக்கு தேவைப்பட்டது என்ன ?

10. எலிசா சூனேமுக்கு போகும்போது அங்கே உணவும், இருப்பிடமும் கொடுத்தது யார் ?





– பாஸ்டர். பாலேஷ் தாசன்,
பெத்தானியா தேவாலயம்,
நார்விச்.


உங்கள் பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி

**BETHANY HOUSE,**
**12 Park Avenue,**
**Southall, UB13AJ.**

சரியான விடையை அனுப்புவர்களுக்கு சிறப்பான பரிசு காத்திருக்கிறது





# BETHANY CHUCH

## EASTER CAMP'2023

Thank you for your participation in our Easter Camp'2023. It was great to have you there!

We would like to sincerely thank you for all your support in making this event successful. We hope you found it valuable and enjoyed the experience.

If you have any feedback or suggestions, please do not hesitate to let us know. We value your input and would love to hear about your experience.

Again, thank you for your participation! We hope to see you at future events.

Sincerely,
Rev TMI Sathiyaraj
& Sis Jasmine Bastiansz (Head Teacher)

**WE GIVE GOD ALL THE GLORY HE DESERVES!**







BETHANY CHURCH

# THANKS GIVING

## 28th YEAR SERVICE

## SAVE THE DATE

## 02 JULY 2023

## 10:30 AM

**GREENFORD TOWN HALL**
Ruislip Rd, Greenford, UB6 9QN

## GET IN TOUCH:


**Church Office:**
Bethany House
12 Park Avenue, Southall
Middlesex, UB1 3AJ, United Kingdom
Website: www.bethanychurches.org
Email: bethanychurchuk@yahoo.com

+4420 8571 2156, +447837 260678, +447872 665157, +447950 735417, +447946 317120

# Contact Us

It is our sincere prayer that something said or done today will be an inspiration and a blessing to you. If you are searching for a place to worship, we encourage you to seek God in prayer and ask if this is where you should join. After service today, we invite you to meet our team where we can greet you personally. We thank God for you and hope you will be able to join us again to worship the Lord with us.

"The Lord will do great wonders among us"
(Joshua 3:5)



**REV TMI SATHIYARAJ**


| | SOUTHALL | WEST DRAYTON | KENTON | SOUTHALL | NORWICH | IPSWICH |
|---|---|---|---|---|---|---|
| LANGUAGE | (TAMIL/ ENGLISH) | (TAMIL/ ENGLISH) | (TAMIL/ENGLISH) | (SINHALA/ENGLISH) | (TAMIL/ENGLISH) | (TAMIL/ ENGLISH) |
| ADDRESS | Bethany House<br>12 Park Avenue<br>Southall<br>UB1 3AJ | Yiewsley Methodist Church<br>Fairfield Road, West Drayton, UB7 8EY | Kenton Methodist Church<br>Woodgrange Avenue<br>Harrow<br>HA3 0XF | Bethany House<br>12 Park Avenue<br>Southall<br>UB1 3AJ | St. Paul's Church<br>Sherwood Road<br>Norwich<br>NR4 6BH | Christ Church Premises<br>Langston Hall,<br>Tacket Street<br>Ipswich, IP4 1AU |
| PHONE | 07837 260678<br>07432 197291 | 07950 735417<br>07904 248108 | 07950 735417<br>07553 372644 | 07872 665157<br>07438 617365 | 07946 317120<br>07449 886983 | 07946 317120<br>07449 886983 |
| E-MAIL | bethanyofficeadm@gmail.com | westdraytonbethany@gmail.com | bethanychurchofgod.kenton@yahoo.co.uk | sinhalabethany@yahoo.com | jthasan2005@hotmail.co.uk | jthasan2005@hotmail.co.uk |
| SERVICE TIME | 11.30 AM | 3.30 PM | 9.30 AM & 11:45 AM | 8.30 AM | 5:30 PM | 1:00 PM |
| PRAYER REQUEST | 07312 930823 | 07904 248108 | 07950 735417 | 07872 665157 | 07449 886983 | 07449 886983 |
| CHILDREN'S CHURCH | 07866 122089 | 07553 372644 | 07553 372644 | 07523 937433 | 07449 886983 | 07449 886983 |



Pas. Justin Thomas



Rev. Kularajasingam Suthesh
Pas Sanchiya Suthesh



Pas. Danny Fernando



Pas. Jesuratnam Thasan
Pas Balesh Thasan

**BETHANY**
CHURCH

# FOLLOW US ON SOCIAL MEDIA

**THE FAMILY U NEED!**

PRAISE THE LORD,

*Have a question on your mind?*
*Feel free to contact us today!*
*24/7 days a week*

DO YOU NEED HELP JOINING US?

**OR**

***DO YOU HAVE A PRAYER REQUEST?***

@ bethanychurch

@ bethanychurch

+44 (0) 7312 930823

**MAILING ADDRESS:**
BETHANY CHURCH
P.O.Box 294
Southall
Middlesex
UB2 5EE
United Kingdom

## CONTACT
US NOW

*+44 (0)7837 260678*
*+44 (0)7432 197291*

*bethanyofficeadm@gmail.com*

*BETHANY HOUSE*
*12 Park Ave, Southall*
*UB1 3AJ*



**REV TMI SATHIYARAJ**

THANK YOU FOR VISITING US!
HAVE A FRUITFIL WEEK.

*www.bethanychurches.org*

***LET'S GROW TOGETHER***